"DINAMALAR"

PAGE NO: 03 DATE: 10.06.2022



ஹங்கேரி அரசின் மதிப்புமிக்க விருது பெற்ற புதுச்சேரி பல்கலைக்கழக இணை பேராசிரியர் உஜ்வால் ஜானாவை, துணைவேந்தர் குர்மீத் சிங் பாராட்டினார்.

**புதுச்சேரி, ஜூன் 10–**

ஹங்கேரி அரசின் மதிப்புமிக்க விருது பெற்ற இணை பேராசிரியர் உஜ்வால் ஜானாவை, புதுச்சேரி பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங் பாராட்டினார்.

புதுச்சேரி பல்கலைக் கழக ஆங்கிலத் துறை இணை பேராசிரியர் உஜ்வால் ஜானா. இவர் எழுதிய 'நோடன் பிரிதிபி' என்ற நுாலை கடந்தாண்டு டிசம்பரில் சாகித்ய அகாடமி வெளியிட்டது.

இந்த நுால் சாகித்ய அகாடமி விருது பெற்ற அமித் சவுத்ரி எழுதிய ஆங்கில நாவலான ஒரு புதிய உலகம் என்ற வங்காள மொழியாக்கம் ஆகும்.

அவர் ஹங்கேரியன் மாநில ஊக்கத் தொகை திட்டத்திற்கு தேர்வாகியுள்ளார். இதன் மூலம் அவர் ஜூன் மற்றும் ஜூலை வரை அமெரிக்கன் ஸ்டடீஸ், டெப்ரிக்கன் பல்கலைக் கழகம், ஹங்கேரி நிறுவனத்தில் கூட்டு ஆராய்ச்சி திட்டத்தை தொடரலாம்.

இதற்காக அவர் இன்று 10ம் தேதி ஹங்கேரி புறப்பட்டு செல்கிறார்.

அதையொட்டி, இணை பேராசிரியர் உஜ்வால் ஜானாவை, பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங் பாராட்டினார்.

"DINAMALAR"

PAGE NO : 03 DATE : 10.06.2022

# புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் வேலைவாய்ப்பு கண்காட்சி

**புதுச்சேரி, ஜூன் 10–**

புதுச்சேரி பல்கலைக் கழகத்தின் தொலைதூர கல்வி இயக்குநரகம், கன்வென்ஷன் மற்றும் கலாசார மையம் சார்பில் வேலைவாய்ப்பு கண் காட்சி நடந்தது.

புதுச்சேரி பல்கலைக் கழகத்தின் தொலைதூரக் கல்வி இயக்குநரக மாண வர்களுக்காக, முன்னணி நிறுவனங்களில் உள்ள பல் வேறு தொழில் வாய்ப்பு கள் பற்றி அறிந்து கொள்ள, வேலை வாய்ப்பு கண் காட்சிக்கு ஏற்பாடு செய் யப்பட்டது.

இதில் 64 பதவிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, 17 பதவிகளுக்கு சலுகை கடிதங்கள் வழங்கப்பட் டன. பல்கலைக் கழகத்தின் தொலைதூரக் கல்வி இயக் குநரக இயக்குநர் ராமையா கூறுகையில், 'எல்.ஐ.சி., உள்ளிட்ட நிறுவனங்கள் வேலை வாய்ப்பு கண்காட் சியில் பங்கேற்றன.

பல்கலைக் கழக வளாகத்தில் நேரடியாக படிக்கும் தகுதியான மாண வர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான வாய்ப்பை, வேலைவாய்ப்பு கண் காட்சி நிறுவனங்களுக்கு வழங்கியுள்ளது.

தற்போது நடை பெற்ற வேலை வாய்ப்பு கண்காட்சியின் வெற் றியை தொடர்ந்து, புதுச் சேரி பல்கலைக்கழகம் தொலைதூர கல்வி இயக்குநரகம் சார்பில், அடுத்த 4– 6 வாரங்களில் மற்றொரு ஆன்லைன் வேலைவாய்ப்பு கண்காட் சியை நடத்த முடிவு செய் துள்ளது.

இதில் நாடு முழுவதும் உள்ள மாணவர்கள், அவர் களின் சொந்த நகரத்திலி ருந்து பங்கேற்க முடியும்' என்றார்.



■ புதுச்சேரி பல்கலைக் கழகத்தின் தொலைதூரக் கல்வி இயக்குநரகம், கன்வென்ஷன் மற்றும் கலாசார மையம் சார்பில் வேலைவாய்ப்புக் கண்காட்சி நடந்தது.

"DINAMALAR"

PAGE NO: 03

DATE: 10.06.2022

# உலக பல்கலைக்கழக தரவரிசையில் புதுச்சேரி பல்கலை.,க்கு இடம்

**புதுச்சேரி, ஜூன் 10–**

சமீபத்திய உலக பல்கலைக்கழக தரவரிசை 2023ல், புதுச்சேரி பல்கலைக்கழகம் உலகின் முதல் 1,000 பல்கலைக் கழகங்களில் இடம் பிடித்துள்ளது.

புதுச்சேரி பல்கலைக் கழக உதவி பதிவாளர் மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

உலக பல்கலைக் கழக தரவரிசை – 2023 பட்டியலை, கியூஎஸ் (QS) நிறுவனம் சமீபத்தில் வெளியிட்டது.

இதில், புதுச்சேரி பல்கலைக்கழகம் 8011000 ரேங்க் வரம்பில் இடம் பிடித்துள்ளது. இந்த ஆண்டு 100 நாடுகளைச் சேர்ந்த 2462 கல்வி நிறுவனங்கள், இதில் பங்கேற்றன.

இதில் 41 இந்தியப் பல்கலைக் கழகங்கள் மற்றும் நிறுவனங்கள் மட்டுமே, 'கியூஎஸ்' உலகப் பல்கலைக் கழக தரவரிசை 2023ல் இடம் பெற்றுள்ளன.

இந்த தரவரிசையானது, கல்வி, பணியமர்த்துபவர் நற்பெயர், ஆசிரியர், மாணவர் விகிதம், ஆசிரியர்களுக்கான மேற்கோள்கள், சர்வதேச ஆசிரியர் விகிதம் உட்பட எட்டு அம்சங்கள் அடிப்படையில் அமைகிறது.

அதன்படி, புதுச்சேரி பல்கலைக்கழகம் சர்வதேச மாணவர் விகிதம், சர்வதேச ஆராய்ச்சி நெட்வொர்க் மற்றும் வேலை வாய்ப்பு முடிவுகள், போன்றவற்றில் நல்ல மதிப்பெண்களை பெற்றுள்ளது.

புதுச்சேரி பல்கலைக் கழகம் 2020ம் ஆண்டு முதல் உலகப் பல்கலைக் கழக தரவரிசையில் பங்கேற்று வருகிறது.

இதுகுறித்து துணை வேந்தர் குர்மீத் சிங் கூறுகையில், 'உலக அளவில் பல்கலைக் கழகத்தின் சாதனைக்கான முயற்சிகள் மற்றும் பங்களிப்புக்காக ஆசிரியர்கள், அதிகாரிகள், ஆசிரியரல்லாத பணியாளர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் மற்றும் அனைத்து மாணவர்களையும் பாராட்டுகிறேன்' என்றார்.

THE NEW INDIAN EXPRESS

10 JUNE 2022

PAGE 2

# Pondy Univ stands with top 1,000 universities in world

**EXPRESS NEWS SERVICE** @ Puducherry

IN the latest QS World University Rankings, 2023, Pondicherry University was placed among the top 1,000 universities in the world.

A record number of 2,462 institutions from about 100 countries participated this year. Only 41 Indian universities and institutions were able to make an entry into the QS World University Rankings 2023.




The ranking is based on eight parameters--academic reputation, employer reputation, faculty-student ratio, citations per faculty, international faculty and student ratio, international research network and employment outcomes. The Pondicherry university scored well in all the above parameters, despite the pandemic.

As per the QS World University Ranking framework, the citations per faculty was the strongest indicator for Pondicherry University at the global level, besides research impact and teaching commitment.

Pondicherry University has been participating in the World University Ranking since 2020 and actively participating in QS Asia University Rankings, QS BRICS University Rankings since 2010.

"DINAKARAN"

PAGE NO: 15

DATE: 10.06.2022

புதுவை பல்கலைக்கழக

# பேராசிரியருக்கு ஹங்கேரி அரசின் விருது



புதுவை பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் குர்மீத் சிங், ஹங்கேரி அரசின் விருது மற்றும் சாகித்ய அகாடமியின் விருது பெற்ற ஆங்கில துறை இணை பேராசிரியர் டாக்டர் ஜானாவுக்கு வாழ்த்து தெரிவித்தார்.

புதுச்சேரி, ஜூன் 10: புதுவை பல்கலைக்கழகத்தின் ஆங்கிலத்துறை இணை பேராசிரியர் டாக்டர் உஜ்வால் ஜானாவுக்கு டெம்பஸ் பவுண்டேஷன் சார்பில் ஹங்கேரி அரசின் நிதியுதவியுடன் 2021-2022 கல்வி ஆண்டிற்கு நிதி வழங்கப்படுகிறது. இதனால், டாக்டர் ஜானா இம்மாதம் முதல் அடுத்த மாதம் வரை ஆங்கிலம் மற்றும் அமெரிக்கன் ஸ்டடீஸ், டெப்ரிக்கன் பல்கலைக்கழகம், ஹங்கேரி, நிறுவனத்தில், கூட்டு ஆராய்ச்சி திட்டம் தொடரலாம். இந்நிலையில் டாக்டர் ஜானா அவருடைய கூட்டு ஆராய்ச்சி திட்டத்தை மேற்கொள்ள இன்று ஹங்கேரி புறப்படுகிறார். மேலும் அவர் நோடன் பிரிதிபி எனும் தலைப்பில் ஒரு புத்தகம் எழுதியுள்ளார். அதனை கடந்த டிசம்பர் மாதத்தில் சாகித்திய அகாடமி, இந்தியாவின் தேசிய கடிதங்களின் அகாடமி வெளியிட்டது. டாக்டர் உஜ்வால் ஜானா, இந்திய கவிதைகள், விமர்சன மனிதநேய படிப்புகள் மற்றும் மொழி பெயர்ப்பு ஆய்வுகள் ஆகிய துறைகளில் பணியாற்றி வருகிறார். அவரது மேற்பார்வையின் கீழ், 3 மாணவர்களுக்கு பிஎச்டி வழங்கப்பட்டது. புதுவைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், பேராசிரியர் குர்மீத் சிங், ஹங்கேரி அரசாங்கத்தின் மதிப்புமிக்க விருதைப் பெற்றதற்காகவும், சாகித்ய அகாடமி விருது பெற்றதற்காகவும், ஆங்கில நாவலின் வங்காள மொழி பதிப்பை வெளியிட்டதற்காகவும் ஜானாவை பாராட்டியுள்ளார்.